# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

## அ.சா. 7 (LW 12 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாலமுருகன் | **தொழில்** | |
| **த/க பெயர்** | ராஜேந்திரன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **18.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட ஆடசியர் அலுவலகம் அருகில் குடியிருந்து வருகிறேன். ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். முதுநிலை பட்டய படிப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எதிரி அசோக்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது கிடையாது. அத்தாட்சியில உள்ள 1வது கையொப்பம் என்னுடையது கிடையாது. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.</u>**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

கடந்த 09.06.2023ஆம் தேதி காலை 09.00 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த தமிழ்அழகனும் நத்தம் ரோடு சிறுமலை பிரிவு மாதா கேவி பக்கம் வந்த போது திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலைய குற்ற எண்.224/2023 வழக்கில் சம்பந்தபட்ட எதிரிகள் அசோக்குமார், மகேந்திரன் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி அசோக்குமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 08.06.2023 ஆம் தேதி மதியம் 02.45

மணிக்கு திண்டுக்கல் பழனி ரோடு பூச்செண்டு பெட்ரோல் பங்கிற்குள் அழகுபாண்டிக்கும், மகேந்திரனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அந்த வாக்குவாதத்தில் அழகுபாண்டி அம்மாவை, அப்பாவை தரக்குறைவாக பேசியதை மனதில் வைத்துகொண்டு அழகுபாண்டியை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று எண்ணி அதே தேதியில் 02.45 மணிக்கு சேமியா கம்பெனிக்கு சென்று அழகுபாண்டியை மகேந்திரன் அழைத்து கொண்டு பூச்செண்டு பெட்ரோல் பங்க்கு வந்த போது அங்கிருந்த அசோக்குமார் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து அழகுபா்ண்டியை சரமாரியாக தலை, வாய், கண், கழுத்து, மூக்கு, தொண்டை குழி ஆகிய பகுதிகளில் வெட்டியதாகவும், அதே அரிவாளை பிடிங்கி மகேந்திரன் அழகுபாண்டியை சரமாரியாக வெட்டி கொலை செய்ததாகவும், அதை ஆய்வாளர் 09.15 மணிக்கு அசோக்குமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை பதிவு செய்தார். அதில் நானும், தமிழ்அழகனும் கையொப்பம் செய்தேன். அதன் பின்பு மகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 10.15 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை பதிவு செய்தார். அதில் நானும், தமிழ்அழகனும் கையொப்பம் செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் தன்னை அழைத்து சென்றால் சிறுமலை ரெண்டலைபாறை பேருந்து நிலையத்திற்கு பின்புறம் முட்புதரில் எதிரி அசோக்குமார் எடுத்து ஆஜர் செய்த ரத்தக்ரை படிந்த மரப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்று, பிளாஸ்டிக் கவரில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய ரத்தக்கரைபடிந்த சட்டை – 2, கைலி – 1, அரைக்கால் டவுசர் – 1 ஆகியவற்றை 12.00 மணிக்கு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நானும் தமிழ்அழகனும் கையொப்பம் செய்துவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்துவிடுவிக்க தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.18 17:38:32 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.